சென்னையில் நடைபெற்ற தொழிலாளர் சேமநல வாரியக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்.

*வினா எண் 736— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் க்ஷேமநல வாரியத்தின் கூட்டம் சென்னையில் நடைபெற்றதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

(ஆ) வாரியத்தின் சார்பில் கோவை நகரத்தில் ஒரு தொழிலாளர் பொழுது போக்கு இல்லம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில் அது குறித்த விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 13வது கூட்டம் சென்னையில் 25—1—80ல் நடந்தது. அக்கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு சபைமுன் வைக்கப்படுகிறது.

(ஆ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, கோவை நகர் மாநகராட்சியானதற்குப் பிறகு ஆயிரக்கணக்கில் அல்ல, இலட்சக்கணக்கில் கூட தொழிலாளர்கள் இருக்கக்கூடிய ஒரு பெரிய மையம் ஆகவுள்ளது. அங்கே தொழிலாளர்களின் பொழுதுபோக்கிற்காக ஒரு பெரிய அளவிலான கட்டிடம், நூல் நிலையம், மற்றுள்ள ஏற்பாடுகளையும் செய்ய அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே. அந்தக் குழுவிலே சி.ஐ.டி.யு, உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அதுபற்றிய தீர்மானத்தைக் கொண்டுவந்தால் அரசு அதுபற்றி பரிசீலனை செய்யும். நீங்கள் சொன்ன யோசனையை அங்கே நல்லமுறையில் பணியாற்றும் உறுப்பினர்கள் தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வைத்தால் பரிசீலனை செய்யப்படும்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அந்தக் குழுவிலே சி.ஐ.டி.யு. பிரதிநிதிகள் இருப்பது உண்மை. ஆனால் அந்த பிரதிநிதிகள் சகலவிதமான காரியங்களையும் தெரிந்துகொண்டு, அவர்களே செய்து முடிப்பார்கள் என்று எண்ணிவிட முடியாது. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் ஞாபகப்படுத்தியிருக்கிறேன். உயர்மட்ட தொழிலாளர்கள் ஆலோசனைக் குழுக்

[*128..ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

கூட்டத்தில்கூட சொல்லியிருக்கிறோம். அங்கே பொழுதுபோக்கு இடம், திருமண மண்டபம் ஆகியவை கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அவர்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வந்து கேட்டது உண்டு. அப்படிப்பட்ட ஆலோசனையை அமைச்சரவர்கள் கோரிக்கையாக ஏற்று, இனிமேலாவது வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அமைச்சர் அந்தக் குழுவின் தலைவர். பொதுவாக அங்கே வருகின்ற தீர்மானங்களை ஒட்டி முடிவு செய்யப்படுகிறது. நான் மீண்டும் சொல்கிறேன். அந்தக் குழுவிலே மற்ற உறுப் பினர்கள் இருந்தாலும் திரு. உமாநாத், எம்.எல்.ஏ. அவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே இப்படிப்பட்ட ஆலோசனையை வைத்தால், நீங்கள் சொன்னதையும் மனதிலே வைத்து, சாதகமான முடிவு எடுக்க நான் ஒத்துழைக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, அங்கே நகர சுத்தித்தொழிலாளர்கள் கடந்த 5 ஆண்டு காலமாக வீடு கட்டு வதற்காக நிதி கோரி மனுக்கள் அனுப்பியது உண்மையா? அது சம்பந்தமாக அமைச்சரவர்கள் உத்தரவு ஏதாவது பிறப்பித்திருக் கிறார்களா? (குறுக்கீடு). இதுவும் தொழிலாளர்கள் பற்றியது தான். நகரசுத்தித் தொழிலாளர்கள் பற்றிய முக்கியமான பிரச்சனை. இந்த நிதியிலிருந்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கேள்வி தொழிலாளர் க்ஷேம நல வாரியத்தின் கூட்டம் சென்னை யில் நடைபெற்றது பற்றியது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, இந்த தொழி லாளர்கள் க்ஷேம நலக் குழுவின் கூட்டம் கூட்டப்படுவதற்கான கால நிர்ணயம், 2 மாதத்திற்கு ஒரு முறை அல்லது 3 மாதத் திற்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டுமென்ற கால நிர்ணயம் உள்ளதா? அப்படி இருந்தால் அந்தக் கால நிர்ணயத்திற்குள் கூட்டப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கேள்வியே தொழிலாளர் க்ஷேம நல வாரியத்தின் கூட்டம் சென்னையில் நடைபெற்றது பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இருந்தாலும் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. பாராட்டத்தக்க முறையில் நடைபெறுகின்றன; நல்லமுறையில் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, விவர அறிக்கையில் வேலூரிலுள்ள காசநோய் மருத்துவ மனையில் தொழிலாளர்களுக்கான பிரிவு ஒன்றைக் கட்டுவதற்கு வாரியம் ஒப்புதல் அளித்தது என்று இருக்கிறது. அந்த வேலை ஆரம்பிக்கப் பட்டுள்ளதா? பணியில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதா? தாமதம் ஏற்பட்டிருந்தால் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அந்தக் கூட்டத்தில் 37 முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் பற்றிக் கேட்டால் பதில் சொல்ல முடியாது. ஆகவே அதற்காக தனிக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

ஆற்காடு நகரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்

* வினா எண் 737. திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆற்காடு நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு, கட்டித் தரும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) ஆற்காடு ஒன்றிய அதிகாரிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் நீண்டகால கடனில் வீடுகள் கட்டித் தரப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆற்காடு நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டித்தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவரவர்களே, சென்ற 6 மாதங்களுக்கு முன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆற்காடு நகருக்கு வந்திருந்தபோது 750 வீடுகள் கட்டித் தரப்பட்டிருக் கின்றது என்பதையும் அதற்காக 68 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கின்றது என்றும் தெரிவித்தார்கள். அது எந்த அளவிலே இப்போது நடைமுறையில் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, வேலூர் வீட்டுவசதி வாரிய செயற்பொறியாளர் அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்.